ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 23—7—44 | இதழ் 20

## அமைப்பு முறை வேண்டும்.

22—7—44-ல், ஜலகண்டபுரத்தில்நடைபெற்ற, ஓமலூர்த் தாலுக்காத் திராவிடஇளைஞர்மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் N. அர்ஜுனன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை கீழே தரப்படுகிறது.

பெரியார் அவர்களே! வரவேற்புக்கழகத்தலைவரே, தோழர்களே! என்வணக்கம். இந்த மாநாட்டுக்குத் தலைமைவகிக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காக என் நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்கிறேன். முதிர்ந்த கட்சிஅனுபவமும் சிறந்த கல்வி கேள்வியும் உடையார் என்னிலும் மிக்கார் பலர் இருக்க, என்னைத் தாங்கள் தலைமைவகிக்கச் செய்ததற்குக் காரணம், எனக்குமேலும் மேலும் கட்சிப் பற்று உண்டாகும்படி செய்யவே என்று கருதுகிறேன். என்னாலான அளவு, திராவிடருக்குப் பணிபுரிவேன் என்று உறுதி கூறுகிறேன்.

### முரசு முழங்குது!

இதுபோது, எங்குநோக்கினும், திராவிட இளைஞர்களின் மாநாடுகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. கிழமைதோறும் மாநாடுகள் கூடுகின்றன, ஆயிரக்கணக்கிலே இளைஞர்கள் கூடுகின்றனர். வீரஉரைகள் ஆற்றுகின்றனர். விடுதலை ஆர்வத்தை ஊட்டுகின்றனர்! வீரக்கோலத்துடன் காட்சிதருகின்றனர், அஞ்சா நெஞ்சுடன் அவர் ஆற்றும் அரிய தொண்டினைக்கண்டு நமது பெரியார் மகிழ்ச்சி அடைகிறார். ஒரு அரிய, தீரமுள்ளமுன்னணிப்படை இன்று தயாராகிவிட்டது. கஷ்ட நஷ்டங்களைக் கவனியாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், சூது சூழ்ச்சிகள் கண்டு சோர்வடையாமல், சளைக்காது உழைக்க இளைஞர்கள் முன்வந்துள்ளனர். இதுகண்டு எதிரிகள், எங்கிருந்து புறப்பட்டது இப்புதுப்படை, எப்படி அமைந்தது இந்தமுன்னணி, என்று எண்ணி ஏங்குகின்றனர். நமக்கோ ஒரு தமிழ்த்தினசரியுமில்லை, நம்முடன் போரிடும் கட்சியினருக்கோ அழகிய ஆங்கிலத்தாட்கள்பல, தமிழ்ப் பத்திரிகைகள் ஏராளம்! நமக்கோ **அமைப்பு முறை இல்லை.** கிளைச்சங்கங்களும், அவைகளைத் தொடர்பாக்கும் சங்கிலிகளும், சுற்று அறிக்கைகளும், அவைகளை எடுத்துச்செல்லும் தூதர்களும், தலைவரின் தாக்கீதுகளும், செயலாளரின் அறிக்கைகளும், இல்லை. என்றாலும், ஆர்வத்திற்கோஎழுச்சிக்கோ, கிளர்ச்சிக்கோ, தங்குதடை காணோம், எங்கும் எழுச்சி, எங்கும் ஆர்வம்,உணர்ச்சிவேகம் புரட்சி வாடை வீசிடக்காண்கிறோம். ஆதரவளிக்கப் பல பத்திரிகைகள் இன்றி, அமைப்பு முறையுமின்றி உள்ள போதே, இத்துணை எழுச்சி இருந்திடக் காண்கிறோம். அமைப்பு ஏற்பட்டுப் பல பத்திரிகைகள் பணியாற்றத்தொடங்கி, உட்பூசல் ஒழிந்து, உளவர்கள்வெளியே ஓடி, கயவர்கள் சாய்ந்துபோனால், பிறகு நமது இயக்கவேகம்எப்படித்தான் இருக்கும், எவ்வளவு பலமுள்ளதாகிவிடும் என்பதை எண்ணும்போதே, எனக்கு உண்டாவதுபோன்றே, ஒவ்வொருதோழருக்கும் பெருமகிழ்ச்சி பிறக்கும் என்று நினைக்கிறேன். அந்தக்காலம், விரைவில் வந்தேதீரும், வந்துகொண்டே இருக்கிறதுஎன்றும் கூறுவேன்.

அமைப்பும், கட்டுப்பாடும், ஒரு கட்சிக்கு மிக்க அவசியம்என்பதை மறுப்பவர் இல்லை. ஆனால், போலி அமைப்புகள், கட்சிக்குப்புண்ணாகமுடியும். உண்மையான அமைப்பு உண்டாக ஆங்காங்கு திடசித்தமும் தீவிரநோக்கமும், கடமையில் களிப்பும்; பதவியில் வெறுப்பும், கஷ்ட நஷ்டத்தை ஏற்கும் துணிவும், கொண்ட இளைஞர்கள் பல நூறு-பல ஆயிரம் தோன்றவேண்டும். அவர்களின் வியர்வையே,கண்ணீரே,இரத்தமேதான், அமைப்பு எனும் அஸ்திவாரத்துக்குத் தேவை. இதன்றி, சர்க்கார்கெஜட்டுகளை வேதமாகவும், கலெக்டர் துரைகளின் கைலாகுகளை மோட்சமாகவும், தோட்டக்கச்சேரிகளைப் பெரும்பேறாகவும், சட்ட சபைகளைச் சாம்ராஜ்யமாகவும், கருதுவோரும், கண்டிராக்ட் உண்டா, கருதும்வேலை கிடைக்குமா, காசுதிரட்ட வழிஉண்டா, பட்டம் கிட்டுமா, பதவி காலிலே தட்டுமா, என்று கேட்கும் சபலசித்தம் படைத்தவர்கள், எத்தனை கிளைச்சங்கங்களை ஏற்படுத்தினாலும், அவைஏற்படுவதைவிட விரைவில் அழிந்துவிடும், எதிரிகளால்அழிக்கப்பட்டுவிடும். ஆகவே, அமைப்புஏற்பட்டு, அது அசைக்க முடியாததாக, நிலைத்து நின்று பணிபுரியக் கூடியதாக் இருக்க வேண்டுமானால்,அந்த அமைப்பு வேலையைத்தலைவர்களென்போர் செய்வதைவிட, இளைஞர்கள் செய்ய முற்படுவதுதான்சரி. மாலை தொடுக்க மலர்வேண்டும், மலர்கிடைக்கப் பூந்தோட்டம் வேண்டும், பூந்தோட்டம்வெறும் பொட்டலாக இருந்தால் அங்கு கிடைக்கும்காளானையும் ஊமத்தையையும், எருக்கலையையும் தொடுத்து மாலையாக்குவது வீண் என்று எவர்தான் கூறார். இதுபோது ஆங்காங்கு நடைபெறும் வாலிபர் மாநாடுகள், பூந்தோட்டங்களாகவே காணப்படுகின்றன. இந்த மலர்களால் தொடுக்கப்படும் மாலை மணமும் குணமும் நிறைந்ததாக இருக்கும். ஆகவே, சிற்றூர்களிலும் வட்டாரங்களிலும் இனிவாலிபர்கள் முனைந்து நின்று, அமைப்பு முறையைக்கைக் கொள்ள வேண்டுகிறேன்.

### இனஎழுச்சி.

இத்துணை ஆர்வம், வாலிபரிடையே இன்று ஏற்பட்டிருப்பதும் இனஎழுச்சியின் காரணத்தாலேதான். மங்கிவிட்டது கட்சி, தூங்கிவிட்டனர் தலைவர்கள்என்று கூறி ஏங்கிக்கிடந்த தலைவர்கள் இப்போது ஆர்வம் தங்குதடையின்றிப் பொங்கிவழிவதைக்காணவேண்டும். இன எழுச்சியின் அறிகுறியே இது என்பதை உணரவேண்டும். எந்தஇடத்திலும் இப்போது, ஆரியர் திராவிடர்என்ற பிரச்னை பேசப்படுகிறது, ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன, சரித்திரம்திருத்தி எழுதப்பட்டுவருகிறது. தன்னை உணராமல் தவித்துக்கிடந்த திராவிட இனம் இன்று, தரணிஆளுவோம் பரணிபாடுவீர் என்று முழக்கமிட்டுக்கொண்டு,முகாம்அமைத்து விட்டது. ஏந்தியவாள்கொண்டு மாணவர்கள் கிளம்பிவிட்டனர்! தோள்தட்டிக்

(2-ம் பக்கம் பார்க்க)

## அமைப்பு முறை வேண்டும்.

1-ம் பக்கத்தொடர்ச்சி

கொண்டு புறப்படுகிறார்கள் திராவிடத்
தொழிலாளர்கள்! திராவிட நடிகர்கள்
ஒருபுறம்! திராவிடப்பண்புக்குப் பாடு
படும் பண்டிதர்கள் மற்றோர்புறம்! திரா
விடவீரர்கூட்டம் வீறுகொண்டெழுந்து
விட்டது. பழமையைச் சாடுகின்றது, புது
மைவித்துகளைத் தூவிப், பகுத்தறி
வெனும் கணைகளை எவி, வயலைஅழிக்க
வரும் வல்லூறுக்கூட்டத்தின் சிற
கொடித்துவருகின்றன. ஆரியம், இது
நாள்வரை. இழைத்தகொடுமைகள் அம்
பலமாக்கப்பட்டு, அதன் சதிச்செயல்கள்
வெளிப்பட்டுச் சந்திசிரிக்கும்நிலை இன்று
ஏற்பட்டுவிட்டது. புனிதமானது, புலமை
நிறைந்தது என்று பூசிக்கப்பட்ட ஏடுகள்
இன்று காற்றில் பறக்கின்றன, அவை
களிலே புதைந்துகிடக்கும் கருத்துகள்,
கண்டனத்துக்கும் கேலிக்கும் ஆளாகி
அவதிப்படுகின்றன. புராணப்பிரசங்கிகள்
பாடு கொண்டாட்டமாக இருந்தகாலம்
போய்த், திண்டாட்டமாகிவிட்டது. கிரு
பானந்தவாரிகள் கேள்வித்தாட்களால்
தாக்குண்டு, திருச்சிற்றம்பலத்தைத்தேடித்
திக்குமுக்காடும் காலமாகிவிட்டது. இரா
மாயணமும் பெரியபுராணமும் ஆரிய
அடிமைகளின் முறிச்சீட்டுகள் என்று
விளக்கப்பட்டுத், தீயில் இடத்தான்வேண்
டும் என்று முழக்கம்செய்யும்காலம் இது.
தீபரவுகிறது, திக்கெட்டும் பரவுகிறது,
தீயரைத்தீய்த்தே தீருவேன் என்ற
பெருங்குரலுடன் பரவுகிறது, ஓடி ஓடி
ஒளிந்தாலும், பாடிப்பாடித்தொழுதா
லும், இனி அத்தீ அவர்களைச் சும்மா
விடாது.

தன்னுணர்வுபெற்ற தமிழன் மூட்டி
விடும் தீயிலே, சனாதனச் சர்ப்பங்கள்
வெந்துமடிந்துதீரும், பார்ப்பனியம்
எனும்மலைப்பாம்புகள், உருண்டு புரண்டு,
கருகித்தான்தீரும். இவ்விதமான எழுச்சி
மிக்கநேரம் இது, இனஆர்வம் கொழுந்து
விட்டெரியும்காலம், விடுதலை நம்மைக்
கிட்டிவரும் காலம், நெட்டுருப்புலவர்கட்
கும், பட்டைப்பூச்சு அணிவோருக்கும்
பயந்திருந்த காலம்அல்ல, பார்ப்பானைச்
சாமிஎன்று பணிந்தகாலமல்ல, பாவபுண்
யம், மோட்சநரகம் என்ற பொய்யுரை
களுக்குப் பயந்தகாலமல்ல இது. இது
பகுத்தறிவுக்காலம். இந்தச் சகாப்தத்
திலே, இளைஞர்கள் வெற்றிபெற்றே தீரு
வர் என்பது உறுதி.

## நீதியும் சதியும்.

திராவிடத்திருநாட்டிலே ஆரிய அரசு
அமைந்ததால், இதுவரையில் நமதுபெரிய
வர்கள், அந்த அரசுக்கு அடங்கிஇருந்து
கொண்டேநீதி கேட்டு, நிந்தனையே
பெற்றுவர நேரிட்டது. 100க்கு 97 பேர்
நாங்கள், பாடுபடுகிறோம் பலனைக்
[illegible] வாட்
டமே பெறுகிறோம், உமக்குத்தானதரு
மம்செய்கிறோம், உம்மாலேயே இழிவாக
நடத்தப்படுகிறோம், கோயில் கட்டுகி
றோம். ஆனால் அதிலே நுழையவோ சம
உரிமைபெறவோ முடியாதுவாடுகிறோம்,
இதுநீதியா என்றுகேட்டுப்பார்த்தோம்,
அதிகாரம் அந்தஸ்து, செல்வம் செல்
வாக்குயாவும் நூற்றுக்குமூவரான உமக்
குத்தானா சொந்தம், இப்படி நாங்கள்
உழைத்து உழைந்து, உங்களைக்கொழுக்க
வைத்து, நாங்கள்தேய்ந்து போகிறோமே
இதுநீதியா என்று கேட்டுப்பார்த்தோம்,
நீதிக்கட்சி மூலமாக, நமக்குக்கிடைத்த
நீதிஎன்ன? ஜாதிஇழிவு ஒழிந்ததா, சமத்
துவம் பிறந்ததா? இல்லை! ஒன்றே குலம்
என்ற உண்மைக்கு உயரிடம் தரப்பட்
டதா? இல்லை! உழைக்கும் கூட்டத்தின்
நலன்களைப்பாதுகாக்க முயற்சிநடந்ததா?
இல்லை, கோயிலிலே அநீதி, குளத்தருகே
கொடுமை! ஊர்களிலே பிரிவுகள்! மதத்
திலே மமதை! கலையிலே, ஆரியவலை,
மதத்தரகரின் தொல்லையும் ஒழியவில்லை,
ஆரிய ஆணவமும் அழியவில்லை, அணு
வளவும் சமுதாயம் சீர்திருந்தவில்லை, நமக்
குக்கிடைத்த நீதியெல்லாம், நம்மிலே சில
ருக்குப்பட்டம் பதவிகள், அதிகாரமற்ற
பதவிகள், அனுபவிக்கமட்டுமே சுவை
யுள்ள ஆனால் பலநற்காரியங்களைச்செய்ய
வழியில்லாதபதவிகள் கிடைத்தன. அத்
துடன், முளைத்தது பதவிக்காக நமக்குள்
சண்டைகள், சதிகள், சூழ்ச்சிகள். பதவிப்
பித்தர்கள், ஏகாதிபத்ய ஏவலர் என்று
எதிரிகள் தூற்றியவசைமொழிகள், விஷ
மப்பிரசாரத்துக்கு ஆளான பாமரரின்
பகை, எனும் இன்னோரன்ன தொல்லை
கள் தொடர்ந்தனவேயன்றி, எந்த இன
உயர்வுக்காக நீதிகோரினோமோ அது
கிடைக்கவில்லை. காகிதப்பூஞ்சோலையிலே
கண்ணவிந்தவன் உலவினதுபோல, ஓட்
டைக் குடத்லதப்பாழுங் கிணற்றிலே
செலுத்தியதுபோலாயிற்று தமிழரின்கதி.
நமது பிரமுகர்கள் கவர்னர்களாகஇருந்த
அதே சமயத்திலே நமதுஇன மக்கள்என்
றும்போலவே "சூத்திராக" இருந்தனர்.
நமது தலைவர்களிலே சிலர் மந்திரிகளாயி
னர், அதே நேரத்திலே நமதுமக்கள் ஆரி
யத்தந்திரத்திலே சிக்கித்தத்தளித்தனர்.
நம்மிலேசிலருக்குச் சர்க்கார் பட்டம்சூட்
டினர், ஆனால் ஆரியர் நமது இனத்திற்
குச்சூட்டிய பழய இழிவுதரும் பட்டம்
போகவில்லை. ஆரியர், பழயபடி பூதேவ
ராகவே வீற்றிருந்தனர், கட்டளைகள்
பிறப்பித்தனர், காணிக்கைகள் பெற்ற
னர், குருமார்களாய் வாழ்ந்தனர். சட்ட
சபைகளிலே நம்மவர் சிலர் நாடாளும்
நாயகர்களாக இருந்த அதேசமயம், தமிழ
ரின்வீடுகளை ஆரியர் ஆண்டனர். அலிக்கு
அணிபணிபூட்டியது போலாயிற்று நாம்
பெற்ற அரசியல் சலுகைகள். சமுதாயத்
துக்குப்பயன் கோரியமுறையிலே கிடைக்
கவில்லை. இந்தப்போலி வெற்றியே நம்ம
வரில் சிலரை, சகலமும்சித்தியாகி விட்
டது என்று நம்பவைத்தது, இந்த மணல்
மேடு, காங்கிரசின் தேர்தல் பிரசா
எனும் பெருங்காற்றினால் அழிக்கப்
டது. அக்காற்றும் அது கிளப்பிய து
நம்மவரில் பலரைமிரட்டி அடையச்
தது, கோட்டைகளை விட்டு வாளைக்
போட்டு விட்டு ஓடினர் பலர். பெ
ரின் பெரும்படை, ஏற்றுக்கொண்
கோட்டையைக் காவல்புரியும் வேலை
பழுதாகிக் கிடந்த பாசறைகளைச்
படுத்தலாயிற்று, ஆயுதங்களைச்செம்
படுத்திற்று, அணிவகுப்புகளை அமை
வெறும் அரசியல் காரியத்திலே அ
செலுத்திக்கொண்டு, ஆரியத்தின்
தை ஒழிக்காமலிருந்தால், ஒரு ப
இல்லை என்பதை உணர்ந்து-உ
அதற்கேற்றபடி, கட்சியைப் புது
லாயிற்று. இந்தப் புதிய வேலைத்தி
முதலிலே திராவிட இனவிழிப்பை
டாக்குவதுஎன்பதுதான். பலநூற்
களுக்கு முன்பே இழந்த கருத்தை
டும் பெறுவது என்னும் குறி
கொண்டு வேலைத்திட்டம் அமைக்
டது. சத்திரத்திலும் சாவடியிலும்
லிலும் குளத்திலும் அதிகார
ஆரியத்தை, மதத்திலும்கலையிலும்
கொண்டு கொடுமை புரியும் ஆரி
வேதமோதியும் கீதமியற்றியும் க
கெடுக்கும் ஆரியத்தை, காணிக்
றும் கதைகூறியும் காலந்தள்ளு
யத்தை, வீரனையும் கோழை ய
வீணரை வாழவைக்கும் ஆரி
ஒழிக்க, சட்டசபைகள் அல்லமு
என்ற உண்மையை உணர்ந்து,
மனதிலே பதிந்துகிடக்கும் ம
துடைக்கும் வேலையைச் செய்ய
அதுபோது ஏற்பட்ட ஆச்சாரி
அலங்கோலத்தை எதிர்த்தனர்.
இந்திப்போர், திரண்டனர்
சிறைக்கதவுகளைத்தட்டினர்.
தாயும் சேயும். பிணத்தைக்க
தமிழகம் பெருங்குரல்கொண்டு
ஆச்சாரியாரின் ஆரியப்பித்தமு
லாயிற்று, தமிழரின் ஆண்மை
தொன்மை, தமிழகத்திலே புத
றெல்லாம் பலர் பேசவும்எழுத
கோட்டை அருகே மீண்டும்
உள்ளேபுகவேண்டுமென்றநாட்
யாரைப் புகழ்வதன்மூலம் உள்
னர், ஓட்டைகள் மூடப்பட்டு
சரியாக்கப்பட்டு, பாசறை பு
கோடு இருப்பதையும், வீரர்கு
கொண்டிருப்பதையும்கண்டு,
முடியாதுபோன செயலைச்செ
பெரியார் என்று செப்பினர்
விட்டது, செலுத்துக என்று
னர். எங்கே? என்று கேட்
யார். இது தெரியாதா? சட்
மீண்டும் கைப்பற்றவேண்டா
கேபோர், படையும் அதன்
என்கின்றனர். பெரியார் இ
படை, இதுதமிழரின் தனி

(மேல்பக்கம் பார்க்

## சீர்திருத்தத் திருமணம்.

30–6–44 காலை, தஞ்சை ஜில்லா, செம்பிய மகாதேவி கிராமத்தில் திருவாரூர் தோழர் டி என். லெட்சப்பா-கனகாம்புஜம் அம்மையார், சீர்திருத்தத்திருமணம் நடைபெற்றது. அது சமயம், இசை உலகஜோதி, நாதஸ்வரச் சக்ரவர்த்தி தோழர் டி. என். இராஜரத்தினம் ஆற்றியசொற் பொழிவு கீழேதரப்பட்டுள்ளது.

"இந்தச் சீர்திருத்த திருமணத்திற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி ஆணையிட்டதற்கு முதலில் எனதுவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இன்று ஒரு புதுமாதிரியான திருமண வழக்கத்திற்கு மாறாக, பரம்பரைக்குப் பகைமையாக நமது சமூகத்தில் நடத்தப்படுகிறதே என்ற ஒரு அபிப்பிராயம் உங்களிடையே உலவுகிறது. ஆனால் நீங்கள் நினைக்கிறபடி இது புதுமையல்ல. நமது சமூகத்தில் குஞ்சிதம்-குருசாமி, சுந்தர வடிவேலு-காந்தம், ஆகியோரின் திருமணங்களும் இன்றைய மணமகனார் திரு. லெட்சப்பா அவர்களின் சகோதரர் தோழர் டி. என். இராமன் அவர்களின் திருமணமும் தீவிரமான சீர்திருத்த முறையில் தான் நடந்திருக்கிறது. மற்ற சமூகங்களிலும் பெரிய ஜமீன்தார்கள் வீட்டுக் கலியாணங்கள் முதல் ஏனையவர்களீறாக இந்த மாதிரி புதுமணங்கள்தான் நடத்தி வருகின்றனர். உதாரணமாக சில நாட்களுக்கு முன் கோவையில் நடந்த, மோட்டார் மன்னர் ஜி. டி. நாயுடு அவர்கள்மகளின் மணம் மிக மிகத் திருத்திய முறையில் மூன்றே நிமிடங்களில் நடந்திருக்கிறது. இன்னுங் கூறவேண்டுமானால், பழைய காலத்தில் தமிழர் திருமணங்கள், காதல் திருமணங்களாகவும், கலப்புத் திருமணங்களாகவுமே, நடந்ததற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

அவை ஒருபுறமிருக்க தமிழர் சமுதாயம் மூடக்கொள்கையில் மூழ்கியிருப்பதை உணர்த்தி, பற்பல வகையிலும் சீர்திருத்தத்தைப் புகுத்தியவர் யார் என்பதை நாம் அறிவோம். அவர்தான் உலகத் தலைவர்களில் ஒருவரான, பெரியார், ஈ. வெ, இராமசாமி அவர்கள். மிரட்சி கொண்டிருந்த நமது இனத்திற்குப் புரட்சியைத்தந்தஅப்பெரியாரைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம். பெரியார்மட்டுமின்றி ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் பெரியாருடன் கலந்து குற்றாலத்தில் ஒரே நாளில் மூன்று சீர்திருத்த மணங்கள் நடத்தியிருக்கிறார். இராஜகோபாலாச்சாரியார் அதை பாராட்டியுமிருக்கிறார்.

ஆகவே நீங்கள் அதிலும் குறிப்பாக நமது சமூகத்தோழர்கள் இத்தகைய புதுமைகளால் யாதொரு ஐயப்பாடானஎண்ணமும்,கொள்ளலாகாதென்றும், பழமை விரும்பும் பெரியோர்கள் ஆத்திரப்படலாகாதென்றும் அறிவிக்க ஆசைப்படுகிறேன். சீர்திருத்த கலியாணங்கள்செய்துகொண்டோரின் வாழ்வு செம்மையாகவே நடந்து வருகிறது. அறிவு உலகத்தோடு அவர்கள் வாழ்க்கை ஒட்டிச்செல்கிறது.

இந்த உறுதிப்பட்ட கொள்கைதான் இன்றைய திருமணத்திற்குக் காரணமாகும். பல ஆண்டுகளாக இளமை முதல் பெரியார் அவர்களின் சீர்திருத்த இயக்கத்தில்,திருவாரூரில்முதல்வனாகத்தொண்டாற்றிய தோழர் திரு. லெட்சப்பா அவர்கள் இன்று இத்தகைய மணம்புரிந்துகொள்வது அவரது கடமை. அதுகண்டு மகிழ்வதோடு நமது சமூகத்தாரும் அவரைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டு, மணமக்களானதோழர் லெட்சப்பா அவர்களும், கனகாம்புஜம் அம்மையாரும் நீடிய ஆயுளும், புகழ்பெற்று செந்தமிழ்போல செழித்து வாழுமாறு வேண்டுகிறேன்.

---

## நான் சாகவில்லை.



"சில முட்டாள் ராணுவத்தலைவர்கள் என்னைக் கொல்லச் சதிசெய்தனர்.நான் இருந்த இடத்துக்கு 6அடி தொலைவிலே வெடிகுண்டு வைக்கப்பட்டது. வெடித்தது. என்னுடைய சகாக்களிலே சிலருக்குப் படுகாயம். எனக்கு விபத்து ஏற்படவில்லை. நான் தப்பித்துக்கொண்டேன். சதிகாரர்கள் நான் இறந்துவிட்டதாக வதந்தி கிளப்புகிறார்கள். அதை நம்பவேண்டாம்" என்று ஹேர் ஹிட்லர் 20-ந் தேதி நடுநிசியிலே பேசினார்,

ராணுவத் தலைவர்கள் புரட்சிசெய்யத் தொடங்கிவிட்டனர், என்று ஹிட்லர் பேச்சிலிருந்தே தெரியவருகிறது. இது தானா நடக்கும்! இன்னும் என்னென்ன நடக்கும் என்று யார் கூற முடியும்!

## பாராட்டுகிறோம்.

ராவ்சாகிப் T. A. V. நாதன் அவர்கள் பொறுப்புள்ள பதவிகளிலே அமர்ந்து தமது அரிய ஆற்றலைநாடு உணரும் வாய்ப்புபெறவேண்டுமென்று நெடு நாட்களாக ஆவலோடு நாம் எண்ணி வந்திருக்கிறோம். சர்க்காரின் திருஷ்டி, நரைதிரைமேலிட்ட பல ஓய்வு நாற்காலிகள்மீதுபாய்ந்தபோதெல்லாம், என் நாதன்போன்றார், நற்பதவிகளிலே நியமிக்கப்படவில்லை என்றுஎண்ணி ஏங்கினதுமுண்டு. இதுபோது, ராவ்சாகிப் நாதன் அவர்கள்,சென்னைச்சர்க்காரிலே, பத்திரிகை ஆலோசகராக நியமனம்பெற்றிருப்பதுகேட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தக்காருக்குத் தக்கதுசெய்த சர்க்காரைப் பாராட்டுகிறோம். இந்த மாகாணத்திலே, ராவ்சாஹிப் நாதன் பெற்றுள்ள அளவு பத்திரிகை அனுபவம் பெற்றவர்கள் அதிகம் இல்லை. அவர்பெற்றுள்ள அனுபவமும், அவருடையதிறமையும் இப்பதவிமூலம் நாட்டு மக்கட்குப் பயன்படப்போவதறிந்து மகிழ்கிறோம், ராவ்சாகிப் நாதன் அவர்கள் மேலும் கீர்த்திபெற்று பல உயர் பதவிகளில்அமர்ந்து, நமது கண்களுக்கும் கருத்துக்கும் காட்சியாகஇருக்க வேண்டுமென்றுவிழைகிறோம்.

---

## திருமணம்.

12—7—44 காலை 9-30 மணிக்கு, தஞ்சாவூர் பில்லுக்காரத்தெருவில், தஞ்சாவூர் தோழர் பி. வேணுகோபால் பி. ஏ; பி. எல்; (அட்வகேட்) அவர்கள் தலைமையில் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், தோழர் டி. வி, சுந்தரராஜன்-அம்சம்மாள். ஆகியவர்களுடைய வாழ்க்கை ஒப்பந்தத்தைச் சீர்திருத்த முறையில் நடத்திவைத்துப்பேசினார். அதன்பிறகு எஸ். ஆர். சுப்பிரமணியம், இராமலிங்கம், சி. பி. சின்னராசு, சி. என். அண்ணாத்துரை, சுப்பண்ணா முதலியவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள். மணமக்கட்குப்பல தோழர்களால் பரிசுகளும் வழங்கப்பட்டது. நன்றிகூறல் ,விருந்துடன் விழாமுடிவுற்றது.

---

### ஈரோட்டில்,

### சித்தவைத்யர் மாநாடு.

ஈரோட்டில், வைத்திய வள்ளல் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின்ஆதரவிலும் முயற்சியிலும், விரைவில் சித்த வைத்யர் மாநாடு நடைபெறஇருக்கிறது. டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மேற்படி மாநாட்டைத்திறந்துவைப்பார் எனத்தெரிகிறது. முழுவிவரம் அடுத்த இதழில் வரும்.

## திராவிடர் பொதுக்கூட்டம்.

[ந. நிருபர்]

சிதம்பரம் ஜூலை 16.

சிதம்பரம் தமிழர் கலைஉரிமைச் சங்கத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழக திராவிடமாணவர் ஆகியவர்களின் அரியமுயற்சியால் மாலை 7-30மணிக்கு ஓர்பொதுக் கூட்டம் இராஜா அண்ணாமலை நகரமண்டபத் தோட்டத்தில் தோழர் சோழவந்தான் ஆவுடையப்பன் தலைமையில் தொடங்கப்பெற்றது. அதுபோது தோழர்கள் இரா. தண்டபாணி, க. அன்பழகன் பி. ஏ; ஆனர்ஸ், இரா. நெடுஞ்செழியன் பி. ஏ; ஆனர்ஸ். புலவர் நா. மு. மாணிக்கம் ஆகியவர்கள் "திராவிடஇளைஞர் கடமை" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தார் தொடங்கியுள்ள சங்கீதசிரோமணி என்ற வகுப்பிற்கு அமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் 66 பாடல்களில் 64 தெலுங்கு கீர்த்தனங்களும், 2 தமிழ்ப்பாடல்களுமாக நிர்ணயித்திருப்பதைக் கண்டித்து ஏகமனதாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

——

## ரூஸ்வெல்ட்.

நாலாவது முறையாக ரூஸ்வெல்ட் அமெரிக்கக் குடிஅரசுத்தலைவர் தேர்தலுக்கு நிற்கத் தயாராகிவிட்டார். இவரை எதிர்த்து டியூஇ என்பவர் போட்டியிடுகிறார். போர் சம்மந்தப்பட்டமட்டிலே இந்தத்தேர்தலின் முடிவு எப்படி இருப்பினும் மாறுதல் இராது என்று டியூஇ கூறுகிறார்.

——

## எழுச்சி வேண்டும்!

"தமிழொளி"

(பெண்களால் முன்னேறக்கூடும் என்ற மெட்டு)

எழுச்சி இளைஞர்க்கு வேண்டும்-தட்டி
எழுப்பத் தாய்நாட்டினை மீண்டும்

அடிமையும் மிடிமையும்
பகையும் பதைத்தே

அடியற்ற மரம்போல
விழவிக் கணத்தே

முடியாததில்லையே ஆமை-போல
மெதுவாய் நகருதல் தீமை!

துடிதுடித்தெழுவீரே நாட்டை-வீழ்த்தத்
தோதுசெய்வோரையே ஓட்ட! (எ

"தமிழனுக்கே தமிழ்நாடு"-இதைத்
தடுக்க யார்செய்தாலுங்கேடு

சமர்செய்து வீழ்த்து வீரின்றே-மேலும்
சாடுந்திறல் கொண்டு நின்றே (எ

## ஜப்பானில் நெருக்கடி,

ஜெர்மனியில் ஏற்பட்டிருப்பதுபோல ஜப்பானிலும் நெருக்கடி உண்டாகிஇருக்கிறது. டோஜோ மந்திரி சபை காரியமாற்றுந் திறனற்றதென்று கருதி, மக்கள் கண்டிக்கின்றனர். எனவே டோஜோ மந்திரிசபை கவிழ்ந்துவிட்டது. ஜெனரல் கொய்சோ முதலமைச்சராகிவிட்டார். இம்பாலைப் பிடித்துக் கொண்டுஇந்தியாவைத்தாக்கத்திட்டமிட்டஜப்பானின்எண்ணம்பாழாகிவிட்டது. மேலும் புதுப்படைகள் இம்முனைக்கு வரும் என்று ஆஸ்திரேலியபிரதமர்கூறுகிறார். ஐரோப்பியப்போர் அக்டோபரில் முடிந்துவிடுமென்றும் அதற்குப் பிறகு நேசநாட்டுப்படைகள் ஒன்றுகூடி ஜப்பானைத்தாக்கித் தகர்க்குமென்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

——

## மறைவு.

பெத்தாம்பாளையம் கோவைமாவட்ட திராவிடர்கழகக் காரியதரிசி தோழர் பழனிச்சாமி அவர்களின் தந்தை தோழர் பழனிமுத்து கவுண்டர் அவர்கள் சுமார் 4 அல்லது 5 மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து தம் 45-வது வயதில் சென்ற ஜூலை முதல்நாளன்று திடீரென்று இயற்கையெய்தவிட்டார். அவரது மரணச்சடங்கும் இறுதிச்சடங்கும் புரோகிதமில்லாமல் தோழர் பழனிச்சாமி அவர்களாலே நடத்திவைக்கப்பட்டன. உற்றார் உறவினருடைய எதிர்ப்பு பலமாகஇருந்தும், புரோகிதமில்லாமலே சடங்குகள் நடத்திவைக்கப்பட்டன. இறுதிச்சடங்கன்று சுமார் 500 ஏழை ஆதி திராவிடர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது மற்றும் சுமார் 200 ஆண் பெண்களுக்கு வேஷ்டி சேலைவழங்கப்பட்டன. இவரது சகோதரரும்பழையகோட்டைப் பட்டக்காரர் மருமகரும், மான தோழர் குப்புசாமி அவர்களும் இவரது தாயாரும் தோழர் பழனிச்சாமி அவர்களுக்கு உதவியாகயிருந்தார்கள்.

——

## எம். எல். பிள்ளைக்கு பொற்கிழி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப்பேராசிரியாகஇருந்து, வேலையினின்றும் விலகிய தமிழறிஞர் கா. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ; எம். எல்; அவர்களை வரவேற்று பொற்கிழிதர, காஞ்சிபுரத்தில் ஒரு வரவேற்புக்கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த அமைப்புக் கூட்டம் 22—7—44 மாலை 6மணிக்கு காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளிக் கடைச்சத்திரத்தில் தோழர் அ. க. தங்கவேலர் அவர்கள் தலைமையில் நடந்தது, பங்கீட்டு அலுவலர் தோழர் இராமலிங்கம் பிள்ளை பி. ஏ; நகராட்சி அலுவலர் தோழர் கதிர்வேலுப்பிள்ளை பி. ஏ; பி. எல்; வக்கீல் கணபதிராவ் பிள்ளை பி. ஏ; பி. எல்; கல்வித்துறையினர் தோழர் முனுசாமி பி. ஏ; ஆசிரியர் க. வஜ்ஜிரவேலு பி. ஏ; எல். டி; தமிழாசிரியர் திருஞானசம்பந்தம்' அருணைவடிவேல்பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர் தோழர் கன்னியப்ப முதலியார் பி. ஏ; எல். டி; சி.என். அண்ணாத்துரை எம். ஏ; ஆகியோர் எம். எல். பிள்ளை அவர்களைப் பாராட்டிப்பேசி, பொற்கிழிதரவேண்டிய அவசியத்தை விளக்கினர்.

---

சென்னை

## சுயமரியாதை மாநாடு.

30—7—44 ஞாயிறு காலை
9-மணிக்கு, கோகலே மண்டபத்தில்
ஆரம்பமாகும்.

தலைவர்:—

கும்பகோணம் தோழர்
K. K. நீலமேகம் அவர்கள்

திறப்பாளர்:—

சேலம் திருமதி.
கனகம்மையார் அவர்கள்
(சேலம் முனிசிபல் காலேஜ் பிரின்சிபல்
T. A. இராமசாமி கவுண்டர் M. A; L. T; துணைவியார்)

கொடியேற்றுபவர்:—

ஆதிமூலம்,

பெரியார் E. V. R. C. N. அண்ணாத்துரை, A. பொன்னம்பலனார், நெடுஞ்செழியன், இந்திராணி பாலசுப்பிரமண்யம் டி. சண்முகம், A. K. தங்கவேலர்: ஈழத்தடிகள் ஆகிய மற்றும்பலர் மாநாட்டில் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## பொன்மலை மாநாடு.

விசேஷவிளம்பரத்துடன் நடத்தப்பட்ட, ரயில்வே தொழிலாளர் மாநாடு. பொன்மலையில் சென்றகிழமை மூன்று நாட்கள்நடைபெற்றது. காந்தீயம்தொழிலாளர்களைமுதலாளித்துவத்துக்குப் பலியிடுவதைஉணராமலும், பொது உடைமைப்போர்வையிலேபார்ப்பனியம்தனதுவிஷமத்தனத்தைபரப்புவதைதெரிந்துகொள்ளாமலும், மாநாட்டிலேகலந்துக்கொண்டபலரும் காங்கிரசின் வலையிலே வீழ்ந்தனர். இதனை உணர்ந்த திராவிடத் தொழிலாளர்கள் விரைவிலேயே வேறோர் மாநாடு கூட்டமுயற்சி எடுத்துள்ளனர்.

# கலைப்புரட்சி.

கலையிலுமா, கைவைக்கிறார்கள்? கார்த்திகேயா, கடம்பா! உனக்குக் கண்ணில்லையா, என்று குளறினர், கலையை இனக்கொலைக்குக்கருவியாக்கியகருத்திழந்தவர்.

கலைப்புரட்சி, காலவேகத்தால் நடந்தே தீரும், நடந்தாகவேண்டும், கலை, ஆரியவலையாக இருத்தல்கூடாது இன இழிவுக்குத் துணைசெய்வதாக அமையலாகாது என்று நாம், தன் மதிப்பாளர்கள் கூறிவந்தோம்.

விளைவு என்ன? கலைப்புரட்சி! பல்வேறு இடங்களிலே இன்று நடந்திடக் காண்கிறோம்.

## போர்வாள்.

கலை, காசு, விளம்பரம், சம்பிரதாயம், முதலிய எதனாலும் கட்டுப்படுத்த முடியாத இளைஞர், தீவிரமான போக்கும் தளராத தைரியமும் கொண்ட, நடிகர், காலரிக்கனவான்களை ஆசிரியர்களாகக் கொள்ள மறுக்கும் கலைஞன், உரிமைக்காகப் போராடும் உள்ள உரம் படைத்த வீரன், தோழர் M. R. ராதா, அவர்களின் திராவிட மறுமலர்ச்சி நாடகசபை, எந்த ஊருக்குப் போகிறதோ அங்கு, புரட்சிப்புயல் வீசுகிறது என்று பொருள்!

அவருடைய கொட்டகை, தீவிரவாதிகளின் முகாம்! அவருடைய நாடகங்கள், பிரசார வெடிகுண்டுகள்! அவருடைய பேச்சு, தமிழ்மரபின் மாண்பை விளக்கும், நடிப்பு, நம்மைப்பரவசப் படுத்தும், எதற்கும் கவலைப்படாத தன்மையோ நம்மை மூக்கின்மீது விரல்வைக்கச்செய்யும்! தஞ்சை மாவட்டத்திலே இளைஞர்களின் ஏறாக விளங்கிவருகிறார் M. R. ராதா. புராண ஆபாசவிளக்கம், ஜாதிக் கொடுமைக் கண்டனம், முதலாளி ஆதிக்கத்துக்குக் கசையடி, இவையே, பல்லவி, அநுபல்லவி, சரணம், நமது M. R. ராதாவின் நாடகக்கீதத்திலே. "வசூல் எப்படி?" என்று கேட்டால், ஒரு புன்சிரிப்புதான், அவரிடமிருந்துபதில்! "இவ்வளவு தீவிரமாகப்போகிறீர்களே, ஜனங்கள் ரசிக்கிறார்களா?" என்று கேட்டால், அந்தச் சுருண்டு வளைந்துச் சொகுசாக உள்ள தலைமுடி குலுங்கத் தலைஅசைத்து "நாம் கொஞ்சம் தைரியமாக நடந்துகொண்டால் எதிர்ப்பு என்னசார்! செய்யும்" என்று கேட்கிறார். உறுதுணையாக தோழியர் ஞானம் இருக்கிறார்கள். மற்றும் தோழியர் நிர்மலா மற்றும் பலர், சின்னஞ்சிறுவர்கள், இதிலே சேர்ந்து பணியாற்றுகின்றனர். திராவிடம், இப்பணியாளருக்குத்தக்க கைம்மாறு செய்கிறதோ இல்லையோ என்பதுபற்றிய கவலையையும் விட்டு, கலைப்புரட்சி செய்யும் இந்தக் கழகத்தாருக்குத், தமிழர் நன்றி கூறக்கடமைப் பட்டிருக்கிறார்கள்.

12—7—44-ல், திராவிட மறுமலர்ச்சி நாடக சபையார், திருவாரூரில், தமது நாடகங்களை வெற்றிகரமாக நடத்திப் புகழ்பெற்றதுடன், போர்வாள், எனும் புதிய நாடகத்தை அரங்கேற்றினார்கள். இந்தச் சமூக சித்திரம், தோழர் C. P. சின்னராஜுவால் தீட்டப் பட்டது. அவரே கதாநாயகனாகவும் நடிக்கிறார். கதை ஒரு தன்னுணர்வாளன் கஷ்டநஷ்டத்தைக் கவனியாமல், தன்னைக் காதலித்த காரிகையையும் தொண்டு செய்ய வைத்து, முடிஅரசைமுறியடித்துக் குடிஅரசு அமைப்பது என்ற கருத்துடையது.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையிலே "போர்வாள்" நடைபெற்றது. நாடகமுடிவிலே, திருவாரூர் நகராட்சித் தலைவர் தோழர் ராமானுஜ முதலியார், பிரமுகர் ஆறுமுக நாடார், ஆகியோரும் மற்றும் பலரும், தோழர் M. R. ராதா அவர்களுக்குக் கேடயம், கோப்பை முதலியன வழங்கினர். தன்மதிப்புக்கழகம், தமிழ் மாணவர் மன்றம் ஆகியவைகள், வாழ்த்து இதழ்கள் அளித்தன. தோழர் சின்னராஜி, தோழியர் ஞானம் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பெரியார் அவர்களும், தோழர் C. N. அண்ணாத்துரையும், தோழர் M. R. ராதா அவர்களைப்பாராட்டியும், கதாசிரியர் தோழர் சின்னராஜுவை வாழ்த்தியும்பேசினர். தோழர் ராதா அவர்கள் அடுத்த முகாமில் மேலும் பலபுதிய சீர்திருத்த நாடகங்களை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார். நாடகமேடையைநமது ராதா அவர்கள், தமிழர்உரிமையைப் பாதுகாக்கும் ஒரு போர்வாள் ஆக உபயோகப்படுத்துவதை மிகமிகப் பாராட்டுகிறோம்.

## மறுமலர்ச்சி!

கலை வளரவேண்டுமானால், கவலைதீர வேண்டும். நள்ளிரவிலே நாடாள்வோனாக நடித்துவிட்டுக் காலையிலே கல்பத்திலே கவலையைக் காண்போன், எப்படி கலைத்தொண்டு புரிவான்! நாடகமேடைகளிலே, கிடைக்கும் இலாபம், நடிகரின் உழைப்பின் பலன். இதிலே அவர்களுக்கு துளியும்பங்கு கிடைப்பதில்லை. நாடகமேடையின் வாழ்வுஎத்காரணம்கொண்டோ, சிதைந்தால், நடிகன் உலகிலே, ஒரு தொழிலுக்கும் இலாயக்கற்று உழல வேண்டிநேரிடுகிறது. இப்படித்தேய்ந்து போன நடிகர்களின் துயரம் உணர்ந்தவர்கள், சிலதிங்களுக்கு முன்புஈரோட்டில் நடைபெற்ற நாடகக்கலை மாநாட்டிலே, நடிகர்களின் பாதுகாப்பு நிதியும், இலாபத்திலே பங்கீடும்தரப்படவேண்டும் என்பதை வற்புறுத்திப்பேசினர். தோழர் N. S. கிருஷ்ணன் அவர்கள் இதுவிஷயமாக உருக்கமானதோர் சொற்பொழிவு ஆற்றினார். ஆற்றுங்காலை ஆங்கிருந்த நாடக முதலாளிகள் 'பேசுவதுஎளிது, செயல்?' என்று செப்பினர், குறுநகையுடன்.

19—7—44ல் நகைச்சுவை அரசர் தோழர் N. S. கிருஷ்ணன், "செயல்" துறையிலே நுழைந்தார், வைபவமாக!

சென்னையிலே, இலட்சுமிகாந்தன், இழந்தகாதல், பம்பாய் மெயில், முதலிய நாடகங்களை நடத்திவரும், மங்களபாலகானசபையார், தமது சபையை விரிவுபடுத்தி, விமரிசையாக நடத்தவும், நடிகர்களின் நிலையை உயர்த்தவும் விரும்பினர். இந்த மறுமலர்ச்சிக்குக் கைகொடுத்தார், நமது N. S. K. கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். நிதியும் மதியும் அளித்து கம்பெனி என்னகதியாகுமோ என்ற சஞ்சலத்தைஒழித்தார். ஆனால் முதலாளித்தனம் எனும் சதிச்செயலுக்கு அல்ல! நடிகர்களின் வாழ்வு நல்லவிதமாக அமைதல் வேண்டும் என்ற நன்னோக்கத்துடன்.

இந்த மறுமலர்ச்சி வைபவம், ஒற்றைவாடை தியேட்டரில் 19—7—44 மாலை 5-மணிக்குத் தோழர் C. N. அண்ணாத்துரையின் தலைமையில் நடைபெற்றது. சென்னைநகர உதவிமேயர், பொதுத்தொண்டு புரியும் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், கலாரசிகர்கள் பலரும்கூடினர். சினிமாத் துறையினரான, தோழர்கள், லேனா, ஜூபிடர்பிக்சர்சார், சீராமுலு நாயுடு, கே. எஸ். மணி, பட்சிராஜா பிலிம் சொந்தக்காரர், கந்தன் ஸ்டுடியோ தலைவர் ஆகியோரும், சி. வி. ராஜு, எவரஸ்ட் சுந்தரம் முதலியோரும், நடிகமணிகளான M. K. தியாகராஜ பாகவதர், சாரங்கபாணி, சி. எஸ். ஜெயராமன், கே. ஆர். இராமசாமி, டி. பாலசுப்பிரமணியம், எம். எஸ். முத்துகிருஷ்ணன், கே. சி. துரைக்கண்ணு, டி. வி. நாராயணசாமி போன்றோரும், நடிக நட்சத்திரங்களான தோழியர் T. A. மதுரம், S. P. தனலட்சுமி, T. R. ராஜகுமாரி, M. V. ஜானகி, ஆகியோரும், நடனமணிகள் நடராஜ், சகுந்தலா கோஷ்டியாரும், மற்றும்பல

(6-ம்பக்கம் பார்க்க)

திருச்சி, தஞ்சை
மாநாட்டுச் செய்திச்சித்திரம்
அடுத்த இதழில்.


# திராவிட நாடு.

காஞ்சி 23—7—44 ஞாயிறு


## சிலிஸ்தான்!

★

"காதகனே! கற்பழிக்கவா துணிகிறய்!"

"கன்னுளா! கட்டிலறைக்குவா"

"கன்னெஞ்சமா உனக்கு? கைபிடித்திழுத்தாலும் வாரேன் என்கிறீரே!"

இவை, கற்புக்கரசி, காதலரசி, கலவிக்கடைக்காரி, எனும் மூன்று விதமானவர்களின் மூன்றுவித மொழிகளாக இருப்பின், யாரும் வியப்படையக்காரணமில்லை. ஆனால், ஒரேமாது, மாலையிலே கற்பு பேசி, நடுநிசியிலே காதலுரையாடி விடியும்போது விரகதாபத்தோடு சொல் வீசினுள் என்றால், வியப்புமட்டுமா இருக்கும், அந்தப் பெண்பால் பேதையா, பித்தம் பிடித்தவளா, என்ற சந்தேகம் உண்டாகுமல்லவா?

இதுகூட அவ்வளவு விந்தையல்ல! எதிரி கிட்டே வருவதற்குமுன்பு வீறுப்பு பேசி எதிரி நெருங்கினதும் பல்லிளித்து நின்று, அவன் அசட்டையாகத் திரும்பிய பிறகு, "ஏறெடுத்தும் பாரேன் என்கிறாரே, நான் இவரிடம் எவ்வளவு நேசமாக இருக்கிறேன், இவருக்கு ஏனோஎன்னிடம் இவ்வளவு வெறுப்பு?" என்று கூறுவதுமாக ஒருவர் இருந்திடக்கண்டால், அந்தப்பேர்வழியின் பெயர் எந்தப்பட்டியிலே பொறிக்கப்படவேண்டுமென்று யோசிக்க வேண்டாமோ!

அதிலும் இவ்விதமான விந்தைமிகுந்த மொழிமாற்றங்கள், ஒருபெரிய பிரச்சினையிலே, ஒரு நாட்டு எதிர்காலத்தைப் பொறுத்தவிஷயத்திலே, மதிப்பிற்குரிய ஒரு அரசியல் தலைவருக்கு இருக்குமானுல், அது விந்தைமட்டுமல்ல, விபரீதமும் கூட என்று கூறுவோம்.

பாரதமாதாவை வெட்டுவதா? அடுக்குமா? இயற்கை இடந்தருமா? அரசியல் அறிவுடைமையாகுமா? ஜனநாயகக் கோட்பாடுஎன்னுவது? பாகிஸ்தானு, பாதகஸ்தானு? இதென்ன கொடுமை! என்று ஆத்திரம்பொங்கப்பொங்க அன்று ஆச்சாரியார் பேசி, முஸ்லீம்லீகை ஏசி, குட்டிக்கதைகளை வீசினுரே, அது உண்மையாக அவருடைய கருத்தா, அல்லது நடிப்புத்திறனு?

பாகிஸ்தானுல் பாதகம் ஏற்படாது! பரங்கியை விரட்டவேண்டுமென்றால் பாகிஸ்தானுக்கு இணங்கத்தான் வேண்டும். பழய துணிநைந்துவிட்டால் இரு துண்டுகளாக்குவது அவசியம்என்றுபேசி வரத்தொடங்கினுரே, இது உண்மைக் கருத்தா, உயர்தரமான நடிப்பா?

பாகிஸ்தானுக்கு நான்சம்மதிக்கிறேன் காந்தியாரும் "ததாஸ்து" கூறிவிட்டார். ஜின்னுசாயபுதான், நானுக,வலிய, பாகிஸ்தான்தர இசைந்தும், சமரசத்துக்குவர மறுக்கிறார், என்னே அவர்போக்கு, நாட்டினரே! இதை நோக்குக, என்முயற்சி முறிந்துவிட்டது, என்று இதுபோது அறிக்கைகள் விடுகிறாரே, இது உண்மையானமனப்பாங்கா அல்லது புதுவிதமான நடிப்பா?

வீரம், சாந்தம், சோகம் என்ற முறையிலே அந்த நாட்களிலே கனல் கக்கும் விழியுடன் நின்றார், பின்னர் புன்னகை முகத்தோரானுர், இன்றோ சிந்தாகூலராகக் காட்சி தருகிறாரே, ஆச்சாரியார், இந்த மூன்றுவிதமான காட்சிகளிலே எது நிஜஸ்வரூபம், எதுவேடம், என்பது நமக்குத்தெரியவில்லை. நாட்டிலே உள்ளோரிலே எத்தனை பேருக்குத் தெரியுமோ நாம் அறியக்கூடவுமில்லை. வேளைக்கொரு பேச்சுப்பேசும் விபரீதம் நம்மைத்தூக்கி வாரிப்போடுகிறது! ஒரு சரியான விளம்பர இயந்திரம் உதவிசெய்வதால்மட்டுமே, இப்படிமாறிமாறிப்பேசுபவர், இன்னமும் அபிப்பிராயம்கூறுமளவு அரசியல் அந்தஸ்து பெற்றிருக்கிறார். ஆரியராக இருப்பதாலேயே இப்படி அவருக்கு எவ்வெப்போது எதெதுதோன்றுகிறதோ அவைகளைக் கூறவும் வாதிடவும் முடிகிறது. ஆனுல், பாகிஸ்தான் சம்மந்தப்பட்டமட்டிலே. ஆச்சாரியார், முடிவான, இருதயப்பூர்வமான அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டாரா, அல்லது வேறு மாற்றங்களும் நேரிடக்கூடுமா என்பதுபற்றி நாம் எதும் கூறுவதற்கில்லை. அவருடைய மொழிப்படி, "வேளைக்கேற்றழளை" அவருக்கு இருக்குமாம்! நல்ல தலைவர்! ஈடில்லை அவருக்கு! அன்பர் ஆச்சாரியாரிடம், குறிப்புப் புத்தகம் இருக்குமோ இராதோ நாமறியோம், நம்மிடம் இருக்கிறது இவருடைய பலரகப்பேச்சுகள் பொறிக்கப்பட்ட ஏடுகள். ஒருமுறை அந்த ஏடுகளைப்புரட்டினுல், கண்காட்சியிலே் வைக்கப்படவேண்டியவர் அவர், என்று நமக்குத் தோன்றுகிறது, அவ்வளவு அபூர்வமான தலைகீழ் மாற்றங்கள்உள்ளன அவருடைய பேச்சுகளிலே!

அவருடையபேச்சின் ரகங்கள், அரசியல் போர்முறையைக்காட்டிக்கூடியன என்றுரைப்பவர் உளர். முதலிலே எதிரியை மிரட்டிப்பார்ப்பது, பிறகு, எதிரியிடம் மித்ரன்போல நடித்துக்காட்டுவது, பிறகு எதிரிமிக முரட்டுத்தனமாக இருப்பதாகப்பிறர் நம்பும்படி பேசிக்காட்டுவது, என்றமுறையிலே ஒருவேளை ஆச்சாரியார், முதலிலே பாகிஸ்தானிகளைப் பதைக்கப் பதைக்கத் தூற்றியும், பிறகு பரிவுகொண்டவர்போல அவர்களைப்பக்கத்திலேவருமாறு அழைத்தும், இதுபோது, பாகிஸ்தானிகள்வேண்டுமென்றே சமரசத்தை வெறுத்துத்தள்ளுகிறார்கள் என்றுபேசியும்வருகிறார் என்று கூறவுங்கூடும். இவைஉண்மைஎனில், ஆச்சாரியார், ஆபத்தான ஓர் தந்திரசாலி! இவையல்ல உண்மை, அவருக்கு முதலிலே பாகிஸ்தான்என்றால் பயமாகத்தான்இருந்தது, பிறகுதான் அவருக்கு அது கேடுபயக்காதுஎன்பது புரிந்தது என்று கூறுவரேல், ஆச்சாரியார், மிக மிக மந்தமதிபடைத்தவர் என்று ஏற்படும். ஆபத்தான தந்திரசாலியானுலும், அறிவுக்கூர்மழுங்கியவரானுலும், இரண்டும், இடையூறுமட்டுமல்ல, நாட்டுக்கு இழுக்குங்கூட!!

பாகிஸ்தானுல் கேடுஇல்லை, நாட்டு அடிமைத்தளைபோகவேண்டுமானுல்,லீகுடன் ஓர் ஒப்பந்தம்செய்துகொண்டேயாகவேண்டும், என்றுஇப்போதுஉரைக்கும் ஆச்சாரியார், முதலிலே ஏன் முப்புரியை உருவிக்கொண்டு, லீகின்மீது உக்கிரமாகப்பாய்ந்தார். ஆர அமர யோசித்து அன்றே இந்த நல்லமுடிவுக்கு வந்திருந்தால், நாட்டிலே நிலைமை எவ்வளவு மாறிஇருக்கும்! ஆச்சாரியார் என்ன, கொடிதூக்கும் குப்பனு, கதர்க்கடை கந்தனு, விஷயம் புரியாமலிருக்க! தலைவர். வக்கீல். உபநிடதம் முதற்கொண்டுஊராளும் முறைவரை படித்தவர். முதலமைச்சர். இப்படிப்பட்ட யோக்யதாம்சங்கள் பெற்றவருக்குப், பாகிஸ்தான் பாதகம் விளைவிக்காது என்பதுபுரிய, இவ்வளவு காலமாபிடிக்கும்! நமக்கு ஆச்சரியமும் அச்சமும் பிறக்கிறது, இதை எண்ணும்போது. தாமதித்துத்தான் தெளிவுபிறந்தது என்றேவைத்துக்கொள்வோம். ஜனுப்ஜின்னுவுக்குத் தாக்கீது அனுப்பினுர், பாகிஸ்தானை ஏற்றுக்கொள்கிறோம் இன்னின்ன நிபந்தனைகளுடன் என்று. ஜனுப்ஜின்னு லீக்காரியக்கமிட்டியைக்கலந்து பிறகு பதில்கூறுகிறேன் என்று சொன்னுர். இதற்குள் அவசரப்பட்டு, சமரசப்பேச்சு முறிந்துவிட்டது, சகலமுயற்சியும்தோற்றுவிட்டது, இணங்கிவர ஜின்னு மறுத்துவிட்டார், என்று நாட்டவருக்கு அவ்வளவு பதைப்புடன் கூறவேண்டிய அவசியமென்னநேரிட்டுவிட்டது என்றுகேட்கிறோம். இரண்டாண்டுகளுக்குமேலாகவே,பாகிஸ்தானை இவர் எதிர்த்தார், இவருடைய மனம் மாறியோ, நிலைமை மாறியோ, போர் முறை மாறியோ, எக்காரணத்தை முன்னிட்டோ, பாகிஸ்தானை ஆதரிக்கிறார்,

இடையே எவ்வளவு கண்டனம், கேலி! எத்துணை எதிர்ப்பு லீகுக்கு உண்டாக்கினார். இவ்வளவையும் பொறுத்துக்கொண்ட, சகித்துக்கொண்ட ஜனாப் ஜின்னா, "சற்றேபொறுமய்யா ஆச்சாரியாரே! உமது சமரசத்திட்டத்தை லீக்காரியக்கமிட்டி முன்னம் சமர்ப்பிக்கிறேன்என்றுசொன்னால்,இதைப்பொறுத்துக்கொள்ளக்கூடாதா ஆச்சாரியார்! ஏதோ குடிமுழுகிவிடுவதுபோல, பத்திரிகைகளிலே அறிக்கைகள் வெளியிட்டுக் கடிதப்போக்குவரத்துகளைப் பிரசுரித்து, விளக்கம்உரைத்து, வியாக்யானம்கூறி, நாட்டைக்கலக்கிய காரணம் என்ன? ஜனாப்ஜின்னாமீது, மக்கள் சீறிப்பாயவேண்டும், முஸ்லீம்இனத்தின் மனதிலே தமது தலைவர்மீது சந்தேகம் உண்டாகவேண்டும், லீகிலேபிளவுஉண்டாக்கவேண்டும் என்பதன்றி, இந்த அவசரத்துக்கு வேறுஎன்ன காரணம் கூறமுடியும்!

இந்தப் போர் துவங்கிய உடனே,ஆச்சாரியார் தமதுகட்சியின் அரசியல்ரேகையைக் கவனித்து ஜாதகம் கணித்தார்! இது பிரிட்டனுக்கு நெருக்கடியான நேரம், இந்தச்சமயத்திலே எவ்வளவு கடுமையாகவேண்டுமானாலும் செய்யலாம் பேரம், என்று கருதினார். லீகும் பிறகட்சிகளும் இருப்பதாகக்கூட அவருடைய ஜாதகத்திலே குறிக்கப்படவில்லை! போர், காங்கிரசின் ஒத்துழைப்பைப்பற்றிச் சட்டைசெய்யவில்லை. தக்ளி துப்பாக்கியாகாது, கைராட்டை விமானமாகாது, என்பது போரிடுபவருக்குத் தெரியுமல்லவா! காங்கிரஸ் "துறவு" பூண்டாலும், 'பிடிசாபம்' என்று மிரட்டினாலும், கவலை இல்லை என்று கூறிவிட்டுக் காரியத்தை வீரியமாக நடத்தி, இதுபோது, பெர்லினில் பீதி உண்டாகவும், மாஸ்கோ மகிழவும், பாரிஸ் வரவேற்பிதழ் தயாரிக்கவும், இலண்டன் தணலிலே வெந்த தங்கமாகவும் விளங்கும் நிலையிலே நேசநாடுகள் உள்ளன. "இந்தியாவைப் பிடிக்கவந்த ஜப்பான் வாலறுபட்டு, சின் குன்றுகளிலே பதுங்கிற்று. இந்நிலை, ஆச்சாரியாருக்குத் தமது "ஜாதகம்" சரியாகக்கணிக்கப்படவில்லை என்பதை ஒருவாறுவிளக்கிற்று. இடையே லீக், அல்லது பிறகட்சி காங்கிரஸ் காலிசெய்த இடத்தைஅடைத்துக்கொள்ளும், அதுசமயம், அக்கட்சிகள்மீது போர் தொடுத்துப் பழயபடி பதவியிலே அமர வழி தேடிக்கொள்வோம் என்று கருதினார், அதிலேயும்அவருடைய "ஆரூடம்" ஆல்மரத்தடி ஜோதிடரின் ஆரூடம் போலாகிவிட்டது.லீகின் வேகத்தைக் கண்டார். ஜனாப் ஜின்னா, வைசிராய் மாளிகையைக் கவனிக்க மறுத்து, சாதாரண முசல்மானின் வீடுகளிலே நுழைந்து, ஒவ்வொரு முஸ்லீமின் மனதிலும் "பாகிஸ்தான்" இலட்சியம் பதியும்படிச் செய்வதைக் கண்டார். பிரிட்டிஷாரின் எதிர்காலதிட்டம் நாட்டுப் பிரிவினைக்கு ஏற்றவிதமாகவே அமையக்கூடும் என்பதைக் கிரிப்ஸ் திட்டம் விளக்கிடக்கண்டார், இனிப் பாகிஸ்தானைப்பெறும் நிலைமைக்கு முஸ்லீம்கள் வந்துவிட்டார்கள், ஆகவே யூகத்தோடு நடக்கவேண்டும், பாகிஸ்தானை நாமே தருவதாகக் கூறுவோம் என்று நினைத்து பாகிஸ்தானை ஆதரிக்கத்தொடங்கினார். ஜனாப் ஜின்னா, எந்த ஜனநாயகக் கோட்பாடுகொண்ட தலைவரும் கூறவேண்டிய முறைப்படி, ஆச்சாரியாரின் சமரசத்திட்டத்தை லீக்காரியக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கிறேன்என்றுகூறினார், இதுமுறையே என்று முன்னாள் மந்திரியார், S. இராமநாதன் மொழிகிறார். அரசியல் அறிஞர்கள் அனைவரும் அவ்வண்ணமே அபிப்பிராயப்படுகின்றனர். ஆச்சாரியாரோ, அலறுகிறார், அழுகிறார்! ஏன் என்றுகேட்கிறோம்!

ஜனாப் ஜின்னாவின் ஒப்பற்ற திறமை, முஸ்லீம் இனத்தின் சக்திக்குப் புது முறுக்கு ஏற்றிவிட்டது கண்டு, இன எழுச்சி என்ற இலட்சியம், அங்குமட்டுமின்றி, திராவிடத்திலும் வீறுகொண்டு வளருவது கண்டு, எதிர்காலம் எப்படி இருக்குமோ என மனமருண்டு, ஏகபோக உரிமை இருண்டுபோவதுஅறிந்து ஆச்சாரியார் அல்லற்படுகிறார். சமரசதிட்டத்தின் யோக்யதை எப்படிப்பட்டது, ஜனாப் ஜின்னா அதை உடனே ஏற்றுக்கொள்ளாமல், ஏன்லீக்காரியக்கமிட்டிக்கு அனுப்புவதாகக்கூறினார், மேற்கொண்டு செய்யப்படவேண்டியது என்னஎன்பது பற்றி முடிவுசெய்யும் பொறுப்பும்,யோக்யதையும், அக்கரையும், ஜனாப் ஜின்னாவுக்குத்தான், என்பதிலே சந்தேகமில்லை. அவர் இஸ்லாமியருக்குமட்டுமல்ல,இந்திய உபகண்டத்துக்கே சரியான வழிகாட்டுவார், என்பதிலே நமக்குத்தளராதநம்பிக்கை உண்டு. அவருடைய கருத்தும்போக்கும்எப்படிஇருக்கும் என்பதுபற்றி முன்கூட்டி நாம்கூறப்போவதில்லை. ஒன்று மட்டும்கூறுகிறோம், அந்தநாளிலே ஆணவத்தோடு பேசிக்கொண்டிருந்தார்களே காந்தீயர்கள், இந்தியா, காந்திஸ்தான் ஆகவேண்டும்என்று, அந்த எண்ணம், மடிந்துவிட்டது. ஆச்சாரியார் இன்று வாழும்இடம் கிலிஸ்தான்!! இந்தநிலைமை ஏற்பட்டகாரணம், லீகின் கிளர்ச்சி, கட்டுப்பாடு, இனஒற்றுமை, தலைவரின் தளராத உழைப்பு. திராவிடரே! இந்தமுறையிலே நாம் பணிசெய்யவேண்டாமா! பாகிஸ்தான் கொள்கை பிறக்குமுன்பு பிறந்தது "திராவிடநாடு" என்ற இலட்சியம். பாகிஸ்தானுக்கு ஆச்சாரியார் இணங்கினால், திராவிடஸ்தானுக்கும் இணங்கத்தானேவேண்டும் என்று டாக்டர்மூன்ஜேகேட்கிறார். பாகிஸ்தானுக்கு இணங்கி, இஸ்லாமியரின் எதிர்ப்பை அடக்கிவிட்டு திராவிடநாட்டை இந்துஸ்தானில் ஒருபகுதியாக்கி ஆரியர்வாழ்விலே குறைவாராதபடி பாதுகாக்கலாம், என்பது ஆச்சாரியாரின் கடைசீ தந்திரத்திட்டமாக அமையும்! திராவிட-இஸ்லாமியக் கூட்டுக்கிளர்ச்சி ஆரியத்துக்கு ஆபத்துஎன்பதை அவர் அறிவார். பாகிஸ்தானும் தனியாகி, திராவிடநாடு இந்துஸ்தானில் ஒருபகுதியாக இருக்குமானால், இன்று இருப்பதைவிட இழிவு, கொடுமை, கஷ்டநஷ்டம் திராவிடருக்கு விளையும். ஆகவே, தீவிரமாகத் துவக்குங்கள் திராவிடநாடு தனிநாடாக வேண்டும் என்றகிளர்ச்சியை! லீகின் கிளர்ச்சியின் பயனாக இன்று கிலிஸ்தானில்வாசம்செய்யும் ஆச்சாரியார், திராவிடக் கிளர்ச்சியின் வேகத்தைத் தாங்கமுடியாது!!

## தீராத்துயரம்!

நமது அன்பர், இசைஅரசு தோழர் தண்டபாணிதேசிகரின் திருக்குமரன் முத்தையா சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்து 15—7—44ல் திடீலென மறைந்த செய்திகேட்டோம், மனம் ஒடிந்தோம். தமிழருக்கு இசையை, இனிமையை, ஊட்டிவரும் இசை அரசரின் அருமைக் குமரன், அவருக்கு அருமருந்தாகவிளங்கி வந்தான். முத்தையாவின் குறுநடையும், புன்முறுவலும், மழலையும் அவருக்குயாழாகவும் குழலாகவும், நாதமாகவும் நர்த்தனமாகவும்இருந்தது, இருதயம் பூரிப்பில் பிணைந்தது, விழியிலே களிப்புகூத்தாட, மொழியிலே மகிழ்ச்சிமிளிர, தேசிகர் தமது திருக்குமரனைக்கண்டு களித்து வாழ்ந்தார். 15—7—44லே, புயலால் பூம்பொழில் அழிந்துபட்டதுபோல, பெருங்காற்றால் விளக்கு அணைந்ததுபோல, சுழலிலேசிக்கிய கலம்பாறையிலே மோதுண்டு தூளானதுபோல, யாழின் நரம்பு அறுந்ததுபோல, முத்தையா மறையவும், தேசிகரின்மனம் ஆறாத்துயரெனும் ஆழியிலே வீழவுமாயிற்று. என்னென்பது இக்கோரத்தை! எதைக்கூறி ஆற்றுவது தேசிகரின் துயரத்தை. இயற்கை, இயற்கை என்று எண்ணற்ற முறை இயம்பினாலும், என்மகனே! என்மகனே! என்று அவருடைய இருதயத்திலிருந்தும் எழும் சோக ஒலி எப்படிக் குறைந்திடமுடியும். புத்திரசோகத்தைவிடக் கொடியது வேறெதுவுமில்லையே! அந்தச்சோகத்திலே, அவர் ஆழ்ந்திடநேர்ந்தது கேட்டு நாம் மனம் வெதும்புகிறோம், அவருக்கு ஆறுதல்கூறும் எண்ணத்தை முந்திநின்று முறியடிக்கிறது நமது சோகம். என்செய்வது! என்னசெய்வது! என்பதன்றி வேறோர் மொழிஅறியாதுதிகைக்கிறோம், ஆறாத்துயரிலே அவர் இருத்தல் கேட்டுத்துடிக்கிறோம், என்செய்வோம்!

## தென்னாற்காடு மாவட்ட திராவிட மாநாடு.

29–7–44 சனிக்கிழமையன்று காலை 9-மணிக்கு திருப்பாபுலியூர் முத்தையா ஆலில் விருதுநகராட்சித்தலைவர் இராவ் பகதூர் V. V. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## மறுமலர்ச்சி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடிகர்களும், குழுமியிருந்தனர். தேனீர் விருந்துக்குப் பிறகு, மறுமலர்ச்சி விழாவுக்குத் தோழர் அண்ணாத்துரை தலைமை வகித்து, கலை, காலத்துக்கேற்றபடி மாற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப்பேசி, நடிகர்களின் நலனைப் பாதுகாக்க முன்வந்த தோழர் N. S. K. அவர்களைப் பாராட்டிப்பேசினார். மங்களபாலகான சபாவின் நடிக நாயகம் தோழர் டி. கே. சந்தானம், அவர்கள் தோழர் N. S. K. அவர்கட்கு ஒரு வாழ்த்திதழ் அளித்தார். நாடக ஆசிரியரும், எண்ணற்ற பலநடிகர்களைத் தமிழ்நாடுஅடையுமாறு செய்தவரும், கலைக்குச் சலியாது உழைப்பவருமான தோழர் T.P.பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள், கம்பெனி நிர்வாகத்தைத் தோழர் N. S. K. அவர்கள் ஏற்றுக்கொள்வதால் உண்டாகக் கூடிய நலன்களை விளக்கிஉணர்ச்சிததும்பப் பேசினார்.

"இலாபம் முழுவதும்உங்களுக்கு. நஷ்டம் வந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். இக் கம்பெனிக்கு நான் அல்ல முதலாளி, இதிலேஉள்ள 100 நடிகர்களுமே முதலாளிகள். நாடகக்கலை மாநாட்டிலே நான் கூறியவற்றைச் செயலிலேகாட்ட இது எனக்கு ஓர் வாய்ப்பு" என்றுகூறினார் நகைச்சுவை அரசர். நன்றிகூறலுடன் மறுமலர்ச்சி வைபவம் முடிந்தது. பிறகு இலட்சுமிகாந்தன்நாடகம் நடத்திக் காட்டப்பட்டது.செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் தோழர் T. சண்முகம் அவர்கள், நடிகர்களைப் பாராட்டிப் பேசினார்.

——

## கிந்தனார் பொன்விழா.

ஜாதிபேதத்தைஒழிக்க, ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வித்துறையிலே முன்னேற வேண்டும்; தாழ்ந்த வகுப்பினன் தாழ்வாரத்திலும்வரக்கூடாது என்றுகூறும் ஆசிரியரே, கூடத்திலே, ஊஞ்சல்பீடத்திலே உட்கார்ந்து, அன்புடன் வெள்ளிச்செம்பிலே பால்தரும் நிலை பெறுவான், என்ற கதைபோலக் காலக் கருத்தைக் கூறிவருகிறாரே, நகைச்சுவை அரசர் தோழர் N. S. கிருஷ்ணன், அவர் நடத்திவரும் கிந்தனார் 14—7—44-ல் சேலத்தில் சர். P. T. இராஜன் அவர்கள் தலைமையில் சென்ட்ரல் டாக்கீசில் நடைபெற்றபோது,கிந்தனார்பொன்விழாவைபவம் நடந்தது. கிருஷ்ணாபிக்சர்ஸ் உரிமையாளர் லேனா என்றழைக்கப்படும்தோழர் லெட்சுமணன் செட்டியார் அவர்கள், தமது அன்பின்அறிகுறியாக, அழகிய வேலைப்பாடமைந்த பெரிய வெள்ளிக் கோப்பை (சுமார் 500 ரூபாய்.மதிப்புடையது)யைத் தோழர் N. S. K. அவர்களுக்குப்பரிசளித்தார். சேலம் நகரசபைத்தலைவர் தோழர் பி. இரத்தினசாமி அவர்கள் ஒரு கோப்பையும் காஞ்சி திராவிட நடிகர் கழகச்சார்பிலே தோழர் C. N. அண்ணாத்துரை ஒரு வெள்ளிக் கிண்ணமும் பரிசளித்தனர். அன்று கிந்தனார், சேலம் கல்லூரிநிதிக்காக நடத்தப்பட்டது. அந்தக் கமிட்டியார் தோழர் N. S. K. அவர்களுக்கு ஒருமெடல் பரிசளித்தனர். கிந்தனார் வெள்ளிவிழா வைபவத்தையொட்டி, கதாசிரியர், உடுமலை நாராயணக்கவி அவர்கட்கு, டாலர் கோர்த்த தங்கச்செயினும், பின்னணிச் சங்கீதக்கோஷ்டியினருக்கு மோதிரங்களும், ரேடியோஅமைப்பாளருக்கு வெள்ளிக்கேடயமும் தோழர் N. S. K. அவர்களால் பரிசளிக்கப்பட்டன. கிந்தனார் கதைப்போக்கையும், தோழர் N. S. K. ஆற்றிவரும் பொதுத்தொண்டினையும் பாராட்டி சர். P. T. இராஜன், C. N. அண்ணாத்துரை ஆகியோர் பேசினர்.

## ஏந்தியவாள்!

7ம் பக்கத் தொடர்ச்சி.

ஏற்படாமற் செய்ய இழிந்த புண்களும், பழக்கவழக்கமும், நாகரிகமும் எப்படிக் காரணமாக இருக்கின்றன என்பதைப் பற்றியும், பெரிய புராணம், கம்ப இராமாயணம், மனுஸ்மிருதி ஆகிய நூல்களை எரிக்கும் முறையாகியகண்டனக் குறியை ஏன் கொண்டுள்ளோம் என்பதைப்பற்றியும், பகுத்தறிவுக் கொள்கைகளைப்பரப்ப முற்பட்டதன் காரணம் என்ன என்பதைப்பற்றியும் எங்கள் அறிவுக்கு எட்டிய வரையில் எடுத்துக் கூறினோம்.

சென்ற இடங்களில் இயக்கத் தோழர்கள் எங்களிடத்துக் கொண்டிருந்த அன்பைப்பல்வகை விருந்துகளின் மூலம் வெளிப்படுத்தினார்கள். அது மட்டுமல்ல; பாசறையின் கண்ணே நமது தளபதி அவர்கள் அறிவுரை கூறும் போது சொல்லியதுபோலக் கண்ணுக்கும், கருத்துக்கும் பலவிருந்துகள் கிடைக்கப்பெற்றன. புதிய நண்பர்கள் பலரைப்பெற்றதோடு அறிஞர் பலரோடு அளவளாவி அகமகிழ்ந்து அவர் கூறும் அறிவுரைகளைப் பெறும் பேறும்பெற்றோம். ஐவகை நிலங்களின் வளப்பத்தை ஆங்காங்கு அடுத்து அடுத்துக்கண்டோம். குறிப்பாக ஆனைமலை, சிறுகுடி, தளவாய்புரம்,மமுசாபுரம் ஆகியஇடங்களிலே இயற்கையின் எழிலைக்கண்டு அதில்திளைத்து மட்டற்ற மகிழ்ச்சி உள்ளத்தே ஊறிஎழ அளக்கலாகா இன்பத்தில் மூழ்கினோம். மஞ்சுதோய்ந்துஎழும் மலையடுக்குகளும், பச்சைப்படாம் விரித்தாற்போன்ற பசும் புற்பரப்பும், நீலமலையினின்றும் துள்ளிவிழும் வெள்ளிய அருவிகளும், காடுகளிடையேகாணப்படும் பளிங்குபோன்ற கலங்கலற்ற நீரினையுடைய சுனைகளும், பசுங்கதிர்கள் நிமிர்ந்துபரவிநிற்கும் கழனிகளும், அவற்றை அடுத்துவிளங்கும் நீரோடைகளும், இருமருங்கிலும் சோலைகளைவிரித்து வண்டலை வடித்துச் செல்லும் பேராறுகளும், செவ்வானம் படர்ந்தாற்போல் இராப்பொழுதில் மலைகளில் மரங்கள் எரியும்காட்சியும் எங்கள் கண்களைக் கவர்ந்ததோடு உள்ளத்தையும் கொள்ளைகொண்டன. எல்லாநலங்களும் ஒருங்கே கிடைக்கப்பெற்றாலும் ஓய்வு நேரங்களில் உரையாட, உரையாடலிலே வல்லவர்கள் தேவையாயிருக்கும். அதற்கேற்றாற்போல் எங்களிடையே தோழர் அ. பொன்னம்பலனார் ஆங்காங்கே கலந்திருந்தது பெரிதும் மகிழ்வூட்டுவதாயிருந்தது. எங்களுடன் இருந்து எங்களுக்கு வேண்டிய எல்லாநன்மைகளையும் குறைவின்றிச்செய்துதருவதில் போற்றற்குரிய பண்பினையுடைய தோழர் பொன்னம்பலனார் அவர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம். 'உவப்பத்தலைகூடி உள்ளப்பிரிதலனைத்தே புலவர்தொழில்' என்பதற்கிணங்க எங்களதுபிரிவு ஒவ்வொருஊரிலும் நிகழ்ந்தது.

மேற் கூறியவாறு போலவே மற்றப் பகுதிகளில் சுற்றிய மாணவர்கள் நிலையும் அமைந்திருக்கும் என்று கருதுகிறேன். இவ்வாண்டில் முதன்முறையாகத் துவக்கிய மாணவசுற்றுச் செலவு (சுற்றுப்பிரயாணம்) ஓரளவுக்கு வெற்றியுடன் முடிந்ததாகக் கூறற்றகும். வரும் ஆண்டுகளில் இம்முறையைத் தகுந்த திட்டங்களோடு கைக்கொண்டு ஓரிடமும் விட்டுப்போகாமல் நாடு முழுதும் வெற்றியுடன் நடைபெறச்செய்ய இஃது பெரிதும் ஊக்கமளிக்கக்கூடிய எடுத்துக்காட்டாகும். இந்தத்துறையிலேநின்று நாட்டிற்கு நல்ல தொண்டு செய்ய ஊக்கமும், உணர்ச்சியும், சலியா உழைப்பும் கொண்ட பல மாணவத் தோழர்கள் அவாவினால் வீறுகொண்டுவிளங்கிய போதிலும்,வாழ்க்கை நிலை நீண்டநாள் இத்துறையில் நிலைத்திருக்கச்செய்யாது என்பதை அறிய அஞ்சவேண்டியிருக்கிறது. உள்ளபடியே நாட்டிடத்தும், இயக்கத்திடத்தும் பற்றுடைய தலைவர்கள்,இயக்கம் வேறு, தாம் வேறு என்று எண்ணாமல் கடமையைச் செயலிலே செய்ய முற்படுவாராயின் அஞ்சவேண்டியநிலை ஏற்படாது. இதற்கான திட்டங்களை அறிவியக்கத்தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் வகுத்துத் தரவேண்டும். நேர்மையற்றவர் பலரிருப்பதைவிட நேர்மையுடைய ஒருவர், இருவர் இருந்தாலும் திட்டங்களை நடைமுறையில்கொண்டுவர முயற்சி எடுக்கவேண்டும். எங்கே பார்ப்போம்! எத்துணைப்பேர்வர இருக்கின்றார்கள் இயக்கப்பற்றுடைய பொருளுடையார். இறுதியாக மாணவசுற்றுச்செலவுவெற்றியுடன் நடைபெற உதவிபுரிந்த இயக்கத் தோழர்களுக்கும் கண்காணிப்பாளர்க்கும் எங்கள் நன்றி உரித்தாகுக என்று என் சார்பாகவும் மற்றத்தோழர்கள் சார்பாகவும் கூறிக்கொள்வதோடு, ஏந்திய "பகுத்தறிவு" என்னும் வாளுக்கு மூத்தமிட்டு ஏற்றுக்கொண்ட கடமையை ஒருவாறுசெய்து முடித்தோம் என்பதைத் தனிப்பெருந்தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்குத், தெரிவிக்க விழைகிறேன்.

# —: ஏந்தியவாள் :—

(வ. இரா. நெடுஞ்செழியன்)

வளமிக்க நாட்டிலே வாழவழியில்லை. வீரர்கள்இருந்த இடத்தில் வீணரின் குடியிருப்பு. கோட்டை கொத்தளங்களிலே கோட்டான்களின் கூக்குரல். அறிஞர்கள் குழுமியிருந்த அரங்கங்களிலே அறிவிலிகளின் ஆடல்பாடல். அறம் நின்று நிலவிய மன்றத்தில் மறத்தின் மருட்கைத் தோற்றம். அரசியலிலே அடிமை, வாழ்க்கையிலேகட்டுப்பாடு. ஆற்றலுடையோருக்கு அருஞ்சிறை. இந்தநிலையில் ஏந்திய வாளுடன் தோன்றி முழங்கினர் புரட்சிவீரர் மாஜினி!எங்கே? அடிமை இத்தாலியிலே. நாட்டை அடிமைத்தளையினின்றும் நீக்கிப்பாடுபட்டோர் பயன்பெறவும், வீணர்கள் வீழ்நிலை அடையவும், உழைப்பாளிகள் ஊக்கம்பெறவும், வாழ்வுவளம் பெறுதற்காக வழிகோலவும் ஆனமுயற்சியிலே ஈடுபட இளங்காளைகள் தேவைஎன்று எண்ணினர்.எண்ணியதற்கிணங்கக்கூடிய காளைகளினிடையே ஏந்தியவாள் வலக்கையிலே விளங்க "ஏ! இத்தாலிய நாட்டு இளைஞர்களே! என்தாய் நாடாம் இத்தாலி மீது ஆணை; என்தாய் மொழியாம் இத்தாலி மொழியின் மீது ஆணை; அதனிடத்தே ஆர்வமுற்றுத் திளைத்திருக்கும் இளைஞர் மீது ஆணை; நாட்டின் நலத்திற்காகக் கடமையைச்செய்து வெஞ்சிறையில் கிடந்துவாடும் வீரர்கள்மீது ஆணை; அத்தகைய எழுச்சியை அவர்களுக்குத் தந்த அவர்கள் உணர்ச்சியின் மீது ஆணை; அவர்கள் வருந்துவது கண்டு தாளாது அவர் அன்னைமார் உகுக்கும் கண்ணீரின் மீது ஆணை; கன்னியரைக்கண்டு காதலிக்கவேண்டிய கட்டிளம் பருவத்தின் கண்ணே கடமையை ஆற்றிக்கடுஞ்சிறையில் கிடக்கும் அவர்காதல் மீது ஆணை; இன்னும் ஆணையிட்டுக் கூறுகின்றேன், என்உடலம் கல்லறையில் சாயும் கடைசிகாலம்வரையிலும் அடிமையைத்தொலைக்கவும், வீணரை விரட்டவும், காளைகளை மீட்கவும், ஆற்றலுடையோரைப் போற்றவும் பாடுபடுவேன். அதற்கு உங்களின் இடையறா உழைப்புத்தேவை" என்று கூறிய ஞான்று ஏந்தியவாளுக்கு வணக்கம் செய்தன இளந்தலைகள். இது இத்தாலி நாட்டிலே நிகழ்ந்த நிகழ்ச்சி.

அஃதே போன்று தமிழகத்திலே ஏந்தியவாளுக்கு முத்தமிட்டு வீறுகொண்டு எழுந்த இளைஞரின் நிலையைக்கேட்க நீங்கள் ஆவல் கொள்ளுவது இயற்கைதானே. அதனைக்கேண்மின். ஈரோட்டுப் பாசறையிலிருந்து மாணவரை விளிக்கும் முரசொலிகேட்டு மாணவர்களாகிய நாங்கள் பாசறை அடைந்தோம். இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் நாள். பாசறையில் கண்டோம் தளபதி அண்ணாத்துரையையும், களம் அமைக்கும் பல கண்காணிப்பாளர்களையும். தலைவர் பெரியார் வேல் பாய்ந்து துடித்துக்கிடக்கும் அரிமா போல் நோய்வாய்ப்பட்டுப் பள்ளியிலே படுத்திருக்கத், தளபதி அருகே அமர்ந்திருக்கக், கண்காணிப்பாளர்கள் பாங்கரிலே வீற்றிருக்க மாணவர்களிடத்தே நீட்டப்பட்டது பகுத்தறிவு என்னும் வாள். நீட்டியவாளுக்கு நேரே நின்று முத்தமிட்டோம். "செருமுக நோக்கிச்செல்க" என்றுசொல்லித்தன்னுடைய ஒரே மகனைப்போர்க்களம் அனுப்பினாளாமே அந்த நாளில் வீரத்தாயொருத்தி. அஃதே போல் எங்கள் கையிலேயும் "அறிவின் எல்லை" என்ற வாளினைக் கொடுத்து "கண்காணிப்பாளர் அமைத்திடும் களம் நோக்கிச்செல்க" என்றார் பெரியார். நீட்டியவாளை நினைவிலே பதித்து, மன்றம்எறும்மதியினைப்பெற்று, அறிஞர் கூறும் அறிவினை ஏற்று, ஏந்திய வாளுடன் நாடு, நகரம், சிற்றூர், பேரூர் பல சுற்றினோம்.

மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், திறப்புவிழாக்கள், ஆண்டு விழாக்கள் ஆகிய பல்வகைக் கூட்டங்களிலே நாங்கள்கலந்துகொண்டோம். மாணவர்களாகிய நாங்கள் பல பிரிவாகப்பிரிந்து பல மாவட்டங்களிலே சுற்றினோமாதலால், யானும் என்தோழர்களிற்சிலரும் சுற்றிய பகுதிகளில் நாங்கள் அறிந்தநிலையையே குறிப்பிடவிரும்புகிறேன். தஞ்சை, கோவை, மதுரை, இராமனாதபுரம் ஆகிய மாவட்டங்களின் ஒவ்வோர் பகுதிகளில் சுற்றும்படிநேர்ந்தது. ஆங்காங்கே உடன் சுற்றிய தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம், மதியழகன், இராமதாசு, இராமானுஜம், ஈ. வெ. கி. சம்பத்து, எஸ். ஆர். சந்தானம் ஆகியவராவார்கள். இடை இடையே பெரியார் அவர்களும், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும்கலந்துகொண்டு கூட்டங்களைச் சிறப்புறச்செய்தார்கள். நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் எதிர்பார்த்ததற்குமேல் ஆதரவும் வரவேற்பும் இருக்கக்கண்டோம். எங்களையெல்லாம் வரவேற்ற ஒவ்வொரு ஊரிலும் இயக்கத் தோழர்கள் எங்களிடத்தில்காட்டிய அன்பும், அளித்த ஆதரவும், ஓம்பியமுறையும், கூறியநெறியும், ஊட்டிய ஊக்கமுந்தாம் எங்களைச் சலியாது சுற்றிவரச்செய்தன. அவர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் தனித்தனியாகக் கூறத்தக்க அளவு பண்பும், சிறப்புமுடையவர்களென்றாலும் அவற்றிற்கெல்லாம் ஏடுஇடங்கொடாதென்றுஅஞ்சியும், பலர் பெயர் தெரியாமல் விடுபடுவார்களே என்றுகருதியும் பொதுப்படவே கூறிச் செல்லவேண்டியவனாயிருக்கின்றேன்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நாங்கள் சொற்பொழிவாற்றத் தொடங்குமுன் எங்கள் சொற்பொழிவினால் ஐயமும், சினமும்கொள்ளுகின்ற தோழர்கள் அஞ்சாது கேள்விகள் கேட்கலாம்என்று குறிப்பிடுவதுண்டு. அவ்வாறுசெய்வது முற்றும் அறிந்தவர்கள் நாங்கள்என்ற ஆணவத்தால் அல்ல, ஐயங்களைப்போக்க வேண்டும்என்ற அவாவினால் ஆகும். அது போல் சில கூட்டங்களில் கேள்விகளும் கேட்கப்பட்டன. உள்ளபடியே கேள்வி கேட்கப்பட்டகூட்டங்களில்தான்உணர்ச்சியுடனும், எழுச்சியுடனும் பொருளை விளக்கவேண்டுமென்ற அவாவுடனும் சொற்பொழிவாற்றியுள்ளோம். பல்லூர்களில் கூட்டங்கள் மாலை 7 அல்லது 7-½
மணிக்குத்துவக்கிஇரவு 11 அல்லது 11-½
மணிவரையிலும், சிலவூர்களில் 12 மணி
வரையிலும்நடைபெற்றிருக்கின்றன. கூட்
டத்திலிருந்து கேட்போரின் முகமலர்ச்சி
எங்கள் ஒவ்வொருவரையும் இரண்டுமணி
நேரஅளவுகூடச் சொற்பொழிவாற்ற
செய்தது. நாங்கள் கலந்துகொண்டகூட்
டங்களில் பெரும்பகுதி மாணவர்களும்
இளைஞர்களும்குழுமியிருக்கக்கண்டோம்
எங்கள் சொற்பொழிவிலே ஓரளவுக்கு
கவர்ச்சிஇருந்தது என்பதை மாணவ
இளந்தோழர்களின்முகம் தெரிவிக்
அறிந்தோம். எப்பொழுதும் கவர்ச்
யின் காரணமாக உணர்ச்சியும், உணர்ச்
யின் காரணமாக எழுச்சியும், எழுச்சியி
காரணமாக முயற்சியும், முயற்சியி
காரணமாக உயர்ச்சியும்அடைவ
இயற்கை. அம்முறையையும்பலமாணவ
தோழர்களிடத்தேகண்டோம். எங்க
டைய சொற்பொழிவிலே ஒருகு
இருக்கக்கண்டோம். சிறிதளவுகூட
றறியாத பாமரமக்கள் புரிந்துகொள்
அளவு எங்களுடைய சொல்லாற்ற
திருத்திக்கொள்ள இயலாத நிலையிலே
இருந்தோம். அந்தக்குறை ஆங்காங
பெரியார் ஈ.-வெ. ரா. அவர்க
தோழர் பொன்னம்பலனார் அவர்
கலந்துகொண்டதால் ஒருவாறு தீ
பெற்றது.

கூட்டங்களில் பொதுவாகஇலக்கி
வரலாறு, பொருளாதாரம், இயற்
யமைப்பு, நிலவளம், மக்கள் இனவ
மனவளம் ஆகியவற்றிலிருந்து ஆதா
ளைக்காட்டி, ஏன் திராவிட நாடு பிரி
படவேண்டும் என்பதைப்பற்றியும்,
பிரிய மக்கள் இனஉணர்ச்சி பெற
டிய இன்றியமையாமை என்ன
தைப்பற்றியும், இனஉணர்ச்சி இல்ல
போகும்படி அரசியல், வாழ்க்கை
சமயயியல், அறிவியல், மொழியியல்
துறைகளில் ஆரியம் எப்படிப்
எப்படிச் சீரழித்து வந்தது என்ப
பற்றியும், இன உணர்ச்சியும் மேம்

(6-ம் பக்கம் பார்க்க.)

## அமைப்பு முறை வேண்டும்.

2ம் பக்கத் தொடர்ச்சி.

படை, தமிழரின்மானத்தை மீட்டுத்தரும் படை, ஆரியத்தைஅழிக்கும் காரியத்தை வீரியத்தோடு ஆற்றவேண்டிய படை, திராவிடநாட்டை இந்தியப் பிணைப்பிலிருந்து வெட்டி, வடநாட்டு முதலாளிமார்களின் கொட்டத்தை மட்டந்தட்டி, திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தின் பொருட்டுப் போரிடவேண்டிய படை, இப்படையினைக்கொண்டு, முன்னம் அடைந்ததுபோன்ற போலிவெற்றி அடைய, வீணுக்கு உழைத்திட எனக்கு மனமில்லை, எனக்குத்தர வேண்டாம் இத்தொல்லை, சற்றே கேளுங்கள் என் சொல்லை, திராவிடநாடு தனி நாடாவது தான் இப்படை செல்லவேண்டிய எல்லை என்று கூறுகிறார். முத்தமிழிலே புது மலர்ச்சி, மதத்தைப்பற்றிப் புதுக்கருத்து, இவைகள் இன்று நாட்டிலே எங்கும் பூத்திடக் காண்கிறோம். இந்தப்பாதை வழி சென்றால், திராவிட இனத்தின் இலட்சியம் கைகூட வழிஇருக்கிறது. கிளைவழி சென்றால், பதவிகளிலே சிலகாலம் அமர வழிஉண்டு, ஆனால், இனவிடுதலைக்கு அது வல்லபாதை

ஆகவே வாலிபர்களே! இனி நீதிக்கட்சி திராவிட இயக்கமாகமாறவும், சுயமரியாதைக்கோட்பாடுகள் அதிலே பீடத்தமரவும், பதவிப்பித்தும், சுயநலச்சித்தமும் தலைக்கேறி, எதிரியின் பாதத்தை முத்தமிட்டாவது பதவி பெறவேண்டுமென்றுகருதும் எத்தர்கள், வெளியேறவழிசெய்து, திராவிட இயக்கத்தை, ஜீவசக்திபொருந்தியதாக, ஜாரைவீழ்த்த லெனின்பெற்ற படைபோலவும், வால்டேர், ரூசோபோன்றாரின கருத்தினால் முளைத்த விடுதலைப் படைபோலவும், கெமால்திரட்டிய படைபோலவுமாக்கி, ஆரியத்தைத்தாக்கி, அதன், ஆதிக்கத்தைப்போக்கி, மானத்துக்கு ஊறுதேடும் தடைகளை நீக்கிக் குன்றெடுக்கும் நெடுந்தோளும் குறைதீர்க்கும் காமும், குள்ளநரிச்செயல்புரிவோரின் சிந்தனையைக்கருவறுக்கும்நெஞ்சு உரமும், தரணிஆளும் திறமும்பெற்ற, திராவிடராய்த் திகழ வேண்டும். இதுவே இளைஞரின் இலட்சியமாக இருத்தல்வேண்டும். இதற்கே நமது ஆற்றல்பயன்படவேண்டும். இனத்தின் விடுதலைக்காக நடத்தப்படும் போரிலே பங்குகொள்வதைவிடச் சிறந்ததோர் இன்பம்இல்லை. இந்த உறுதியுடன் நீங்கள் தொண்டாற்றவேண்டும் என்று கூறிக்கொண்டு, மீண்டும் ஓர் முறை என்வணக்கம்கூறி, உரையை முடிக்கிறேன். வாழ்க பெரியார், வாழ்க திராவிடர், திராவிடநாடு திராவிடர்க்கே.

---

## மதுரை "திராவிடநாடு" ஏஜண்டு.

மதுரை நகரில் "திராவிடநாடு" விற்பனையாளராகத் தோழர் P. பொன்ராமன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். கீழ்க்குறிப்பிடும் முகவரியில் "திராவிடநாடு" கிடைக்கும்.

பி. பொன்ராமன்
"திராவிடநாடு ஏஜண்ட்"
கீழமாசிவீதி மதுரை.


# சென்னை, ஒற்றைவாடை தியேட்டரில்

## 31-7-44 திங்கள் இரவு 9-மணிக்கு

## பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில்,

காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினரால்

# சந்திரோதயம்

## எனும் சமுக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

### கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட்டுகள் விற்கப்படும்.

S. குருசாமி B. A; ஐரோட்
திருவல்லிக்கேணி.
மயிலை சீனி. வேங்கடசாமி,
மைலாப்பூர்
K. P. சாமி, பருப்பு வியாபாரம்,
20, கிரேஸ் கார்டன் 3-வது சந்து
இராயபுரம்.
டாக்டர் தருமாம்பாள், 213,
தங்கசாலை தெரு, சென்னை.
டாக்டர். கணேசம், 4, லாயர்
சின்னதம்பிமுதலி தெரு, பெத்து
நாயகன்பேட்டை.
மகாதேவன், நியூஸ் ஏஜண்ட், சுமை
தாங்கி தங்கசாலை, சென்னை.
சி. தங்கராஜ், 41, கூக்ஸ்ரோட்,
ஓட்டேரி சென்னை.
மகாமதுரகவி முருகேச பாகவதர்
(பக்கிங்காம் மில்ஸ்) பெரம்பூர்.
மற்றும்பல இயக்க முக்கியஸ்தர்
களிடமும் கிடைக்கும்.

**டிக்கட்டுகள்: ரூ. 5, 2, 1 அணு 8.**

டி. சண்முகம்
(சென்னைநகர ஜஸ்டிஸ் தலைவர்)
நாடகக்கமிட்டித் தலைவர்.

N.V. நடராசன்,
பொதுக்காரியதரிசி.


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.